ஸ்ரீ ஆஞ்சனேயர் சகாயம்.

ஜாதகப்பலன் விளக்கம்.

என்னும்

சோதிட சுருக்க நூல்.

இஃது

பிரபல ஜோதிட வித்வான்

ஆ. இராமய்யங்கார்

அவர்கள் இயற்றியது.

மதுரை புக்ஷாப்,

நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ் அவர்களால்

மதுரை, விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

பிரைட்] 1931 [விலை ... 3.

அட்டவணை.

முதலாவது அத்தியாயம்:— துவாதச இராசிகளின் அதிபர்களும் அவர்களின் காரகத்வமும். (பக்கம் 1)

இரண்டாவது அத்தியாயம்:—ஜென்ம லக்கினத்துக்கு எந்த பாவாதிபன் சுபன், அசுபன், யோககாரகனென்பதையும் கிரகங்களின் சத்துரு, மித்துரு சமனென்பதையும், சத்துரு, மித்துரு, உச்சவீடு, நீசவீடு இவைகளையும் நிர்ணயித்தல். (பக்கம் 6)

மூன்றாவது அத்தியாயம்:—கிரகங்களின் நைஸர்க்கிக பலத்தையும், சுபர்கள் சுபத்தைக் கொடுக்கும் விதமும், கொடுக்காத விதமும், பாவிகள் அசுபத்தைக் கொடுக்கும் விதமும், கொடுக்காத விதமும், நன்மையைக் கொடுக்கும் விதமும் நிர்ணயித்தல் ஸ்தானங்களின் பெயரையும், வலிமையையும், மாரக லக்ஷணத்தையும் நிர்ணயித்தல். (பக்கம் 12)

நான்காவது அத்தியாயம்:—பொதுப்பலன்கள் ஜன்மகால லக்ஷணம், அரிஷ்டயோகங்கள், தீர்க்கரோகி, நித்திய தரித்திரன், அங்கஹீனன், அந்தகன், ஊமை, செவிடன், பைத்தியன் இவர்களின் பிறவிக்குறிய யோகங்கள். (பக்கம் 16)

ஐந்தாவது அத்தியாயம்:—ஜாதகன் வாழ் நாளில் அடையவேண்டிய புருஷார்த்தங்களும், தொழில் நிர்ணயமும் விளக்கிக் காட்டல். (பக்கம் 24)

ஆறாவது அத்தியாயம்:—தசாபுக்தி பலன் விவரணம். (பக்கம் 30)

M.K.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஜாதகப்பலன் விளக்கம்

முதலாவது அத்தியாயம்

இராசி மண்டலத்தில் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பன்னிரண்டு இராசிகள் அடங்கியுள்ளன. ஜாதகன் பிறந்த இராசியே ஜென்மலக்கினமாகும். ஜென்மலக்கின முதற்கொண்டு முறையே ஒவ்வொரு இராசியையும் பாவம் என்று சொல்வர். மேஷம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரு விராசிகளின் அதிபர்களையும் அவர்களின் இயல்பும் (காரகத்வங்களையும்) இந்த அத்தியாயத்தில் கூறுவோம்.

மேஷம், விருச்சிகம்:— இவ்விரு ராசிகளுக்கும் செவ்வாய் அதிபதி.

ரிஷபம், துலாம்:— இவைகளுக்குச் சுக்கிரன் அதிபதி.

மிதுனம், கன்னி:— இவைகளுக்குப் புதன் அதிபதி.

கடகம்:— சந்திரன் அதிபதி.
சிம்மம்:— சூரியன் அதிபதி.
தனுசு, மீனம்:— வியாழன் அதிபதி.
மகரம், கும்பம்:— சனி அதிபதி.

மேற்கூறிய இராசி அதிபதிகளைக்கொண்டு லக்கின முதல் முறையே பன்னிரண்டு பாவாதிபர்களை அறியலாம். உதாரணமாக தனுசுலக்கினத்துக்கு வியாழன் அதிபன். ஆகவே வியாழன் லக்கினாதிபன். இரண்டாம் பாவாதிபன் சனி. மூன்றாம் பாவாதிபன் சனி. நான்காம் பாவாதிபன் வியாழன் என்று இவ்வாறு அறியவும்.

இப்பாவங்களின் பலன்களையும், நவக்கிரகங்களின் காரகத்வங்களையும் கூறுவோம்:—

இலக்கினமென்ற முதற்பாவம்:—ஜாதகனின் ஆயுள், நிறம், லக்ஷணம், மனசு, செல்வம், கீர்த்தி இவைகளைக் குறிக்கும். ஆகவே லக்கினத்துக்கு அதிபன் இத்தனை பலன்களைக் கொடுக்கும் இயல்புடையவன் என்பதையும் குறிக்கிறது.

இரண்டாம் பாவம்:—குடும்பம், (Family), நேத்ரம், தனம், வாக்கு (Speech) இவைகளைச்சொல்லும்.

மூன்றாம் பாவம்:—சகோதரம்(Brothers & Sisters) ஆயுள், தைரியம், போஜனம், ஆபரணம், போகம், சங்கீதம்.

நான்காம் பாவம்:—மாதா, கல்வி, வீடு, வாஹனம், சுகம், பந்து, புதையல், வியாபாரம், பந்தனம்.

ஐந்தாம் பாவம்:—புத்திரன், தாய், தகப்பன் வர்க்கம், பிரபுத்வம், புத்தி, புண்ணியம், சிநேகம், சத்காலக்ஷேபம், மானம்.

ஆறாம் பாவம்:—வியாதி, சத்துரு, கடன், விரோதம், வியவஹாரம், அபவாதம், சோரம், ஆக்கினை, அவஸ்தை, பந்தனம், நிந்தனை, அவமானம், கலகம்.

ஏழாம் பாவம்:—மனைவி, காமம், விவாகம், ஆசை, மாரகம்.

எட்டாம் பாவம்:—ஆயுள், கடன், பகை, பங்கம், தரித்திரம், மரணம், வழக்கு, கலகம், ரோகம், அவமானம், சலனம், துக்கம், தூக்கம்.

ஒன்பதாம் பாவம்:—பிதா, புண்யம், தர்மம், பாக்கியம், உபதேசம், ஞானம், யோகம், வியாபகத்வம்.

பத்தாம் பாவம்:—கர்மம், தொழில், ஆக்கினை.

பதினோராம் பாவம்:—லாபம், மூத்தோர்.

பன்னிரண்டாம் பாவம்:—விரையம், ஸ்தானபேதம், பங்கம், சிலவின்பேரில் சுகம் அனுபவித்தல்.

மேலே சொன்ன பாவங்களுக்கு அதிபதிகள் கீழே சொல்லப்போகும் தன்மைப்பிரகாரம் அமைந்திருந்தால் தங்கள் பாவத்திற்குண்டான பலன்களைக்கொடுப்பார்கள்.

இனி சூரியன் முதலான கிரகங்களின் காரகபலன்கள் பின்வருமாறு:—

சூரியன்:—பிதா, ஆத்மா, சௌரியம், உத்தியோகம், கீர்த்தி, சரீரம், மலை, காடு, யாத்திரை, சத்வகுணம், இராஜாங்கம், கோதுமை, நாயுடு, க்ஷத்திரிய ஜாதி, கிழக்கு திக்கு, உரைப்பு, சிவன், தாம்பிர நிறம், உஷ்ணம், பித்தம், ஜுரம்.

சந்திரன்:—மாதா, மனசு, உத்தியோகம், கீர்த்தி, சாந்தகுணம், அரிசி, உப்பு, சுண்ணம், கோமுட்டி, உப்பளவர், வண்ணான், வடமேற்கு திக்கு, வெண்மை, பால், தயிர், பார்வதிதேவி, உப்பு ருசி, ஸ்நாநாதிகம், ஜலதீரம், உப்புப்பிரதேசம், ஜலகண்டம், ஜலதோஷம், ஜீரணக் குறைவு, பேதி, வாந்தி.

செவ்வாய்:—சகோதரம், பூமி, தைரியம், கொடுமை, கொலை, அக்கினி விபத்து, ஆயுத விபத்து, வைதவ்வியம், மாங்கிலியம், சடுதி மரணம், இரக்தப்போக்கு, கெட்ட தொழில், விபசாரம், கோபம், கொடை, சிரங்கு, கொப்பளம், வைசூரி, பிளவை, சோரம், யுத்தம், கலகம், துமையல், நாயுடு, வடுக ஜாதி, க்ஷத்திரிய ஜாதி, தெற்கு திக்கு, சிவப்பு நிறம், சுப்பிரமணியர், துவரை, பித்தம், சுரம், கொலை, சின்னபின்னம்,

புதன்:—மாதுர்வர்க்கம், (அம்மான் முதலானவர்கள்), கல்வி, ஞானம், வைஷ்ணவ அனுஷ்டானம், விஷ்ணு பக்தி, கதை காவியம் இவைகளில் பரிசிரமம். பிரசங்க சாமர்த்தியம், தமிழ், சோதிடம் இவைகளில் வல்லமை, புத்திரக்குறைவு, அலித்தன்மை, வியாபாரம், எழுத்து வேலை, சிற்பத் தொழில், சங்கீதம், நாட்டியம், மோகம், கர்வம், பரிகாசம், டம்பம், போகம், வடக்கு திக்கு, பச்சை நிறம், வாக்கு, விஷ்ணு, பாசிப் பயிறு, வைஷ்ணவர், தாதர், வைசியர், கணக்கர், தாசிபரர், கபம், வாய்வு, தோல் வியாதி.

வியாழன்:—புத்திரர், உத்தியோகம், செல்வம், கௌரவம், புத்தி, யுக்தி, பாண்டித்தியம், சத்விஷயம்,

மேன்மை, சௌபாக்கியம், தீர்க்கம், லாபம், ஆசாரியவம், சொர்னம், சகல சுகபோக சாம்பிராஜ்ஜியங்கள் சத்வ குணம், பிராம்மணவர்க்கம், நல்லஹிருதயம், வடகிழக்கு திக்கு, பொன்னிறம், தக்ஷிணமூர்த்தி, கடக்ஷ கபம்.

சுக்கிரன்:—களத்திரம், வாகனம், நேத்திரம் போகம், சங்கீதம், நாட்டியம், ரஜோகுணம், வாசனை திவியங்கள், கருவிழிகள், ஐஸ்வரியம், வியாபாரம், அழகு ரத்தினம், ஆசை, ஸ்ரீதேவதா கடாக்ஷம், உபாசனை ஸ்திரீ ஜாதி, மர்மஸ்தானம், தாசி சகவாசம், விப்பிவர்க்கம், வைசிய வர்க்கம், தாசிவர்க்கம், தென்கிழக்கு திக்கு, வெண்மை நிறம்: மொச்சை, புளி, ஈயம், ஜலப்பிதேசம், சமுத்திரம், தீர்த்த யாத்திரை (Pilgrimage or Voyage), குதிரை, பால் தயிர் நெய், வெள்ளி அழகிய மாடகூடங்கள். தடாகங்கள், தர்மகாரியங்கள், தேவாலய காரியங்கள், கபம், நீர்வியாதி, ஜலதோஷம், ஸ்திரீரோகம் முதலியன.

சனி:—ஆயுள், மௌட்டியம், தரித்திரம், பந்தனம், துன்பம், அவமானம், கெட்ட மார்க்கம், லோபம், சோம்பல், தாமதம், சாகசம், வஞ்சகம், சித்தப்பிரமை, ஞாபகக்குறைச்சல், யூகமின்மை, விநாசம், ஊனம், ஜீவனமின்மை, அலைச்சல், தனிமை, அடங்காத்தன்மை, தமோ குணம், துக்கம், வாணியன், சாணான், நாட்டுக்கோட்டை செட்டி, சூத்திரர், சேவகாவிர்த்தி, கருப்பு நிறம், சாஸ்தா தேவதை, உளுந்து, எள்ளு, இரும்பு, களவு, சத்தியமின்மை; கோட்சொல்லுதல், வாதம், வாய்வு, வலிப்பு, பிசாசுபாதை.

இராகு:— சனியைப் போலவே காரகப் பலன்களுள்ளவன். துருக்கர் ஜாதி, நிறம் கருப்பு, தென்மேற்கு திக்கு, இரசவாதம், பில்லி சூனியம், செப்பிடு வித்தை, மோசத் தொழில், சண்டாளத் தொழில், அக்கினி விபத்து கெட்ட ஸ்பாவம், விஷப் பரீக்ஷை, மந்திர வித்தை, பெண் கிரகம், மாதாமககாரகன், வாய்வு வலிப்பு, அங்க ஊனம், குஷ்டம்.

கேது:— பிதாமககாரகன், சனி, இராகுவைப்போல் பலன்கள், ஆங்கிலோ இண்டியன், கிறிஸ்தவர், நிறம், சிவப்பு, வடமேற்கு திக்கு, வாய்வு, வலிப்பு, குஷ்டம்.

இரண்டாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் எந்த பாவாதிபன் ஜென்ம லக்கினத்துக்கு சுபன், யோககாரகன், எந்த பாவாதிபன் அசுபன் என்பதை ஆராய்வோம்.

மேஷலக்கினத்துக்கு:— சூரியன், சந்திரன், வியாழன், இவர்கள் சுபர்கள். புதன், சுக்கிரன், சனி அசுபர்கள். சுக்கிரன் மாரகன். மாரகன் என்றால் கொல்பவன் என்ற பொருள்.

ரிஷபலக்கினம்:— புதன், சனி, சுபர்கள், சந்திரன், சுக்கிரன், செவ்வாய், வியாழன் பாவிகள். சூரியன் சுபனாயினும் சுபத்தைச் செய்யான் செவ்வாய் மாரகன்.

மிதுனலக்கினம்:—சுக்கிரன், புதன் சுபர்கள். வியாழன், சனி யோககாரகர்களாயினும் பாவிகளே. செவ்வாய், சூரியன் பாவிகள். சந்திரன், வியாழன், செவ்வாய்,

சூரியன் இவர்கள் சம்பந்தப்பட்ட ராகு கேதுக்கள் மாரகப்பலனை கொடுப்பார்கள்.

கடகலக்கினம்:— செவ்வாய், வியாழன், சுபர்கள் யோககாரகர்கள், இவ்விருவர்களின் சேர்க்கை முதலியன யோகம் சிறப்பிக்கும். புதன், சுக்கிரன், சனி பாவிகள் சூரியன் மாரகனாயினும் கொல்லான். சனி மாரகனாவான் புதன், சுக்கிரன் மாரகலக்ஷணம் பொருந்தியிருக்கி மாரகம் செய்வார்கள்.

சிம்மலக்கினம்:— செவ்வாய், சுக்கிரன் யோககா கர்கள், வியாழன் சுபன். சுக்கிரன், சந்திரன், புதன் சனி பாவிகள். வியாழன் சுபனாயினும் அஷ்டம பாவாதி பத்தியத்தால் அசுபத்தையும் கொடுப்பான். புதன், சனி மாரகாள். சுக்கிரன், சந்திரன் மாரகலக்ஷணம் பொருந்தி யிருக்கில் மாரகம் கொடுப்பார்கள்.

கன்னிலக்கினம்:— சுக்கிரன் ஒருவனே சுபனும் யோககாரகனுமாவான். சனி சுபனாயினும் ஷஷ்டாதி பத்தியத்தால் அசுபத்தையும் கொடுப்பான். சுக்கிரன் வியாழன் மாரகம் கொடார்கள். செவ்வாய், சந்திரன் சூரியன் பாவிகள். செவ்வாய், சந்திரன் மாரகலக்ஷண பொருந்தியிருக்கில் மாரகம் கொடுப்பார்கள். அல்லது இவர்கள் சம்பந்தப்பட்ட இராகு, கேதுக்கள் மாரகம் செய்வார்கள்.

துலாலக்கினம்:— சந்திரன், புதன் யோககாரகர்கள் சனி சுபன். வியாழன், சுக்கிரன் பாவிகள். செவ்வாய் மாரகன். சந்திரன், புதன் இவர்களுடன் சனி, சுக்கிரன் கூடவோ, பார்க்கவோ, இருக்கில் யோகம் நாசமாகும்.

விருச்சிக லக்கினம்:—சூரியன், சந்திரன் யோககார
கர்கள் வியாழன் சுபன். சனி சுபனும் பாவி:புமாவன்.
சுக்கிரன், புதன், செவ்வாய் பாவிகள். சுக்கிரன் மாரகன்.
சூரியன், வியாழனுலும், சந்திரன் வியாழனுலும் யோக
மாம். புதன், சனி, கேது இவர்கள் யோகபங்ககார
கர்கள்.

தனுர் லக்கினம்:—சூரியன், செவ்வாய் சுபர்கள். சூரியன்,
புதன் யோககாரகர்கள். சூரியன், புதன் இவர்களாலுண்
டாகும் யோகத்தைக்காட்டிலும், சூரியன், செவ்வாய்,
வியாழன் இவர்களாலுண்டாகும் யோகம் விசேஷம். சனி,
புதன், சுக்கிரன் பாவிகள். சுக்கிரன், சனி மாரகாள்.

மகரலக்கினம்:— சுக்கிரன், புதன் இவர்களால் யோ
கம். வியாழன், செவ்வாய், சூரியன், சந்திரன் பாவிகள்,
சனி மாரகனுயினும் கொல்லான். சந்திரன், செவ்வாய்
மாரகாள், சூரியனுல் யோகபங்கம்.

கும்பலக்கினம்:— சுக்கிரன் யோககாரகன். புதன்
சனி இவர்கள் சுபத்தையும் அசுபத்தையும் கொடுப்பார்
கள். வியாழன், செவ்வாய், சந்திரன் இவர்கள் பாவிகள்.
வியாழன்,சூரியன் மாரகர்கள். சுக்கிரனுனவன் சந்திரன்,
புதனுடன் கூடில் யோகம் கெடும். சுக்கிரன் புதனுடன்
மட்டுங் கூடில் சாமானியமாக விருக்கும்.

மீனலக்கினம்:—சந்திரன், செவ்வாய் சுபர்கள். செவ்
வாய், வியாழனுல் யோகம். சுக்கிரனுல் யோகபங்கம்.
சுக்கிரன், சூரியன், புதன், சனி பாவிகள். சுக்கிரன், சனி
மாரகர்கள் இவர்கள் மாரக லக்ஷணமின்றி வனுக்கில்
இதரபாவிகளும் மாரகர்களாவார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு லக்கினத்திற்கு சுபன், அசுப
யோககாரகர்கள் மாரகர்கள் இவைகளைக் கண்டறிந்
பின்னர் இனி அவர்கள் நிலைமையைக் கண்டறிந்து பல
பொருந்தியிருக்கில் மேற்கூறியவர்கள் தங்கள் பலனை
கொடுப்பார்களென்றும் இல்லாவிடில் பலனைக் கொடா
விபரீதப்பலன்களைக் கொடுப்பார்களென்றும் அறிவோ

விபரீத பலனைக் கொடுப்பவர்கள்:—பாவிகளானலு
சுபர்களானலும் பகைநீசம் 6, 8, 12-ஆமிடங்களில் ஸ்தி
அல்லது 6, 8, 12க்குடையோர்களின் திருஷ்டி, சம்பந்த
பெற்றிருந்தால் விபரீத பலன்களைக கொடுப்பார்க
ஆகவே பாவியானவன் பகைநீசமடைந்து விபரீதமா
சுபபலன்களைக் கொடுக்கும்போது மறுபடியும் பாவ
பகை இவர்களின் திருஷ்டி அல்லது சமபந்தம் பெ
திருத்தல் வேண்டுமென்றும், சுபன் பகை நீசமடைந்
விபரீதமான அசுபத்தைக்கொடுக்கும்போது மறுபடியு
பாவர், பகை. இவர்களின் திருஷ்டி சம்பந்தம் பெ
திருத்தல் வேண்டுமென்றும் சுபர்களின் திருஷ்டி ச
பந்தமே வேண்டுமென்றும் இதனுல் பெறப்பட்டது.

மேலும் பகைநீசம் பாவக்ஷேத்திரஸ்திதி பெற்றவ
கள் எந்த கிரகமானுலும் சரி, சத்துருவன்னியில் சுப
களின் திருஷ்டியையோ சம்பந்தத்தையோ பெற்
நன்மையைத் தரும் என்றும் ஊஹிக்கப்பட்டது.

இயற்கையான பாவபலன்களைக் கொடுப்பவர்கள்:-
சொந்தவீடு, நட்புவீடு, உச்சவீடு இவைகளை யடை
திருப்பார்கள். மேலும் இவர்கள் பாவர். பகை முதலி
வர்களின் சமபந்தத்தையோ திருஷ்டியையோ பெ
றிரார். இதற்குமுன்னுல் பாவர் யாவர்என்பதை ஒ
வொரு லக்கினத்துக்கும் சொல்லியிருக்கிறது.

இனி இன்னகிரகத்துக்கு இன்னகிரகம் சத்துரு, மித்துரு சமன் என்பதை இதன் மூலமாய் அறியலாம்.

கிரகம்	சத்துரு	மித்துரு	சமன்
சூரியன்	சனி, சுக், இராகு, கேது	சந், செ, குரு	புதன்
சந்திரன்	இராகு, கேது	சூரியன், புதன்	செ, வி, சுக், சனி
செவ்வாய்	புதன், இராகு, கேது	சூ, சந், வி	சுக், சனி
புதன்	வியாழன்	சுக், சனி	சூ, செ, சந், இராகுகேது
வியாழன்	புதன், சுக்	சூரியன், சந், செ	சனி, இராகு, கேது
சுக்கிரன்	சூரியன், சந்	புதன், சனி, இராகு, கேது	செ, வியாழன்
சனி	சூரியன், சந், செ	புதன், சுக், இராகு, கே	வியாழன்
இராகு, கேது	சூ, சந், செ	சனி, சுக்	புதன், வியாழன்

இன்ன கிரகத்துக்கு இன்னவீடு நட்பு, பகை, உச்சம், நீசம் என்பதை விளக்கும் கட்டம்

கிரகங்கள்	நட்பு வீடு	பகை வீடு	உச்ச வீடு	நீசவீடு
சூரியன்	கடகம், விருச்சிகம், தனுசு, மீனம்	மகரம், கும்பம் ரிஷபம்	மேஷம்	துலாம்
சந்திரன்	சிம்மம், மிதுனம், கன்னி		ரிஷபம்	விருச்சிகம்
செவ்வாய்	சிம்மம், தனுசு, மீனம்	மிதுனம், கன்னி	மகரம்	கடகம்
புதன்	ரிஷபம், துலாம், கும்பம்	தனுசு	கன்னி	மீனம்
வியாழன்	சிம்மம், மேஷம் விருச்சிகம்	மிதுனம், கன்னி, ரிஷபம், துலாம்	கடகம்	மகரம்
சுக்கிரன்	மிதுனம், மகரம், கும்பம்	சிம்மம், கடகம்	மீனம்	கன்னி
சனி	மிதுனம், கன்னி, ரிஷபம்	சிம்மம், கடகம், விருச்சிகம்	துலாம்	மேஷம்

இராகுவிற்கு மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் இந்த வீடுகள் உத்தமமான வீடுகளென்றும், கேதுவிற்கு மீனம், கடகம், நல்ல வீடுகளென்றும் மற்றவை சாமான்னியமென்றும் கூறப்பட்டிருக்கிறது. நவக்கிரகங்களின் சொந்த வீடுகளை முதல் அத்தியாயத்தில் காண்க. சொந்தவீட்டிற்கு ஆட்சிவீடென்றும் சொல்வர்.

மூன்றாவது அத்தியாயம்

இந்த அத்தியாயத்தில் கிரகங்களின் வலிமையையும் சுபாசுபத் தன்மையையும் மாரக லக்ஷணத்தையும் கூறுவோம்.

சப்தகிரகங்களில் புதன் குறைந்த பலம் உள்ளவன் புதனைக்காட்டிலும் செவ்வாய் அதிக பலமுள்ளவன். செவ்வாயைக் காட்டிலும் சனியும், சனியைக்காட்டிலும் வியாழனும், வியாழனைக் காட்டிலும் சுக்கிரனும், சுக்கிரனைக்காட்டிலும் சந்திரனும், சந்திரனைக்காட்டிலும் சூரியனும், சூரியனைக்காட்டிலும் இராகு கேதுக்களும் பலத்தையுடையவர்கள். இதை "நைஸர்க்கிக பலம்" என்று சொல்வர். எல்லாவற்றைக் காட்டிலும் இராகு கேது பலம்பொருந்தியவர்களாகையால் இவர்கள், தங்களுடன் சேருகின்ற கிரகங்களின் பலத்தைப் பிடுங்கிக்கொண்டு விடுகிறார்கள். இராகு தன்னுடன் சேருகின்ற கிரகத்தின் அல்லது கிரகங்களின் பலத்தைப் பிடுங்கி தானே நேரில் கொடுப்பான். கேதுவோ பலத்தைப் பிடுங்கிக்கொண்டும் கொடுக்கவும் மாட்டான். பலம் பிடுங்கப்படுகிற கிரகங்கள் சக்தியற்றனவாய் கெட்டுவிடுகின்றன இவை அனுபவ சித்தம்.

இதுபோல் புதன் இதர கிரகங்களின் சேர்க்கையைப் பெறின் தன் ஸ்வய பலத்தை இழந்துவிடுகிறான். புதனுடைய பலத்தை அபகரித்த கிரகம் மித்துருவானால் புதனுடைய பலத்தைத் தானே கொடுக்கிறது. சத்துருவானால் கொடாதிருக்கின்றது. பலமிழந்த புதன், சுபனாகில் சுபத்தைச் செய்யச் சக்தியற்றவனாகிறான். பாவியாகில் முன்னிலும் கெட்டுவிடுகிறான் அதாவது பாபத்தைக் கொடுக்கவும் இயலாதவனாகின்றான். இதுபோல் மற்றக் கிரகங்களின் சம்பந்த வாயிலாக பலன்களை ஊகிக்கவும்.

சுபப் பலனைக் கொடுக்கக்கூடிய கிரகமானது பாவி, பகை இவர்களின் சேர்க்கையையோ, திருஷ்டியையோ பெறக்கூடாதென்றும், பகை, பாவர் நீசவீட்டிலிருக்கவும் கூடாதென்றும் முந்தின அத்தியாயத்தில் கூறப்பட்டது. இந்த அத்தியாயத்தில் சுபரும், பாவரும் கூடின் அவர்கள் கொடுக்கும்பலன் எத்தன்மைத்து எனக்கூறுவோம்.

சுபரும் பாவரும் கூடி சுபர் வலிமையாகி சத்துருவானால் பாவியை வென்று சுபத்தை நிலைநாட்டுகின்றனர். மித்துருவானால், சுபத்துடன் பாப பலன்களையும் கலந்து கொடுக்கின்றனர். பாபர் வலிமையாகி சத்துருவானால்,

சுபனே வென்று அசுபத்தையே நிலைநாட்டுகின்றனர். மித்துருவாகில் அசுபத்துடன் சுபத்தையும் கலந்து கொடுக்கின்றனர். இவர்கள் கொடுக்கும் சுபம் சாமான்னியமாகவிருக்கும் ஆகவே ஒரு கிரகம் வலிமையுள்ளதென்று எவ்வாறு அறிவது என்றால் நட்பு. ஆட்சி, உச்சம், நைஸர்க்க பலம் பெறவேண்டுமெனத் தெரிகிறது. இத்துடன் ஸ்தான வலிமை பெறவேண்டும். பஞ்சவித ஸ்தானங்களில் கேந்திரம், திரிகோணம், "உபஜயம்" முக்கியமானவைகளாம். கேந்திரமாவது ஜென்மலக்கினத்துக்கு 1, 4, 7, 10. ஆமிடங்களாகும். திரிகோணமாவது 1, 5, 9. ஆமிடங்களாகும். உபஜயமென்பது 3, 6, 10, 11. ஆமிடங்களாகும். ஆகவே, வலிமையுள்ள கிரகமானது கேந்திரம், திரிகோணம் உபஜயஸ்தானங்களிலிருக்கவேண்டு மென்றுந்தெரிகிறது.

இதுபோல் இலக்கினத்தில் உள்ள புதனும், வியாழனும் நாலாமிடத்தில் சந்திரனும், சுக்கிரனும், ஏழாமிடத்தில் சனியும், 10 ஆமிடத்தில் சூரியனும் செவ்வாயும் விசேஷ வலிமையுள்ளவர்களாம்.

மேலும் ஒரு கிரகம் மெலிவுற்றிருப்பதை எவ்வாறு அறிவதென்றால் அக்கிரகம், பகை, நீசம், அடைதல், நைஸர்க்கிக பலத்தை இழத்தல், பகை, பாவர் திருஷ்டி அல்லது சம்பந்தம் பெற்றிருத்தல் ஆகிய இவைகளைக் கொண்டு அறியலாகும். இத்துடன் துர்ஸ்தான "மென்ற (இலக்கினத்துக்கு) 3, 6, 8, 12. இந்த இடங்களிலிருக்கும் ஸ்திதியைக் கொண்டும் அறிவது.

இனிமேல் ஜென்மலக்கினத்துக்கு எந்தெந்த வீட்டுக்குடையவன் சுபன். எவன் அசுபன். எவன் மாரகன் என்பதை அறிவோம்.

ஜென்மலக்கினத்துக்கு 5, 9, ஆம் வீட்டுக்கதிபதிகள் சுபர்கள். 3, 6, 8, 11 க்குடையவர்கள் பாவிகள்.

இவ்விரண்டு விதமான வீடுகளுக்கு அதிபதிகள் சுபரும், பாவியுமாவார்கள். 2, 12 க்குடையவர்கள் மிகவும் சாமான்னியர்களென்றும் சுபர்களுடன் கூடினால் சுபராவார்கள். மேலும் 2, 12 க்குடையவர்கள் 5, 9 க்குடையவர்களானால் சுபர்களென்றும் 3, 6, 8, 11 க்குடையவர்களானால் பாவிகளென்றும் அறிவதே சால்பு. 1, 4, 7, 10 க்குடையவர்கள் கேந்திராதிபதிகள் எனப்படுவர். இந்த அதிபதிகள் சனி, செவ்வாய், சூரியனாகில் சுபர்களாவார்கள். மேலும் இவர்கள் 5, 9 க்குடையவர்களானால் மிகவும் சிறப்பான சுபர்களாவார்கள். 3, 6, 8, 11 க்குடையவர்களானால் சாமான்னிய சுபரும் பாவியு மாவார்களென்றும் அறிவது 1, 4, 7, 10 க்குடையவர்கள் சனி, செவ்வாய், சூரியனாகி 2, 12 இவ்விடங்களுக்கும் அதிபதிகளாகில் சுபத்தன்மையில் குன்றுர்களென்றும் அறிக.

1, 4, 7, 10 க்குடையவர்கள் வியாழன், சுக்கிரன், புதன். இவர்களாய் வந்தால் அசுபர்களாவார்கள். ஆகவே இவர்களுக்கு கேந்திராதிபத்திய தோஷம் உண்டென்றும். அதிலும் சுக்கிரன், வியாழன் இவர்களுக்கு இ தோஷம் அதிகமென்றும், புதனுக்கு சாமான்னியமென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. கேந்திராதிபத்திய தே

ஷம்வாய்ந்த சுக்கிரன் 3, 6, 8, 11, 12 ஆமிடங்களுக்கும் அதிபதியாகில் முன்னிலும் அதிகமான பாவியாகிவிடுகிறன். உதாரணம் சிம்ம லக்கினத்துக்கு சுக்கிரன் 10க்குடையவனுவது பற்றி கேந்திராதிபத்திய தோஷம் பெற்றும், 3 க்குடையவனுவது பற்றி பாவியுமானது குறிப்பிடத்தக்கது,

மாரகலக்ஷணம்:— 2, 7 க்குடையவர்கள் 3, 6, 8, 12 ஆமிடங்களிலும், 3, 6, 8, 12 க்குடையவர்கள் 2, 7 ஆமிடங்களிலும். வீரியம்பெற்று பலம் பொருந்தியிருக்கில் மாரக லக்ஷணமாகும். கேந்திராதிபத்திய தோஷம் வாய்ந்தவர்கள் 2, 3, 6, 8, 12. இந்த இடங்களில் வீரியம் பெற்று 2, 7 க்குடையவர்களுடன் கூடப்பார்க்க, மாரக லக்ஷணமாகும்.

நான்காவது அத்தியாயம்

போதுப்பலன்கள்:—ஜன்மகால லக்ஷணம் . மகரம், சிம்மம், இந்த லக்கினங்களில் பிறந்தவர்களுக்குப் பிறந்த வீட்டு வாசல் தெற்கேப் பார்த்திருக்கும், அல்லது லக்கினத்துக்கு நாலுக்குடையவன் லக்ஷணப் பிரகாரம் திக்கு அமையும்; மேஷம், கன்னி, தனுசு, மீனம், மிதுனம் —வடக்குப்பார்த்திருக்கும் அல்லது நாலுக்குடையவனின் லக்ஷணப் பிரகாரம் திக்கு அமையும்; ரிஷபம், கும்பம், கடகம்—கிழக்கு திக்கிலே வாசல். விருச்சிகம், துலாம்—மேற்கு திக்கிலே வாசல்.

வீட்டின் அமைப்பு:— இலக்கினத்துக்கு நாலுக்குடையவன், வியாழன், சுக்கிரன், புதன் இவர்களிலொன்றுகி உச்சம்பெற்று உத்தமஸ்தானங்களிலிருக்க, நான்காமிடத்தையோ நான்குக் குடையவனையோ சனி, கேது, மாந்திகூடாது. நோக்காதிருக்கில் மாடமாளிகை, கெட்டி மச்சு வீடாம்.

நாலுக்குடையவன் கெட்டுப்போய் நான்கையோ நாலுக்குடையவனையோ சனி, கேது, மாந்தி கூடப் பார்க்க சிறிய பழையவீடு.

நாலாமிடத்தை எத்தனை ஸ்திரீ கிரஹங்கள் பார்க்கின்றனவோ, கூடுகின்றனவோ அத்தனை ஸ்திரீகள் உபசூதிகைகளாக இருந்தார்களென்றறிவது. அவர்களில் செவ்வாய் பார்க்க விதவை என்றும், சனி, இராகு, கேது பார்க்க நரைத்துப்போன வயது சென்றவளென்றும் கொள்க. சுக்கிரன் பார்க்க சுமங்கிலியாம்.

எந்த லக்கினத்தில் ஜனித்தாலும், அந்த லக்கினத்தின் ஆதிபாகத்தில் ஜனித்தால்,சுகப்பிரஸவமாயிருக்கும். அந்திய பாகத்தில் கஷ்டப் பிரஸவமாகும். மேலும் லக்கினத்தில் பாவிகளான சனி, செவ்வாய், இராகு, கேது இவர்கள் நிற்கினும், பார்க்கினும் சுபர் கூடாதும் பாராதிருக்கில் கஷ்டப் பிரஸவமாகும். குழந்தை மாலை போட்டும் பிறக்கும்.

சந்திரன், நாலுக்குடையவன் இவர்களை சூரியனுவது அல்லது ஒன்பதுக்குடையவனுவது கூடப்பார்க்க பிதா சமீபத்திலிருக்க ஜெனித்தவனென்றும், சந்திரன் நாலுக்

குடையவன் இவர்களை சூரியன், ஒன்பதுக்குடையவன், கூடாது, பாராது, சராசியிலிருக்க பிதா அயலூரிலிருந்து நடையிலிருப்பானென்றும், ஸ்திரமானால் அயலூரிலேயே இருப்பானென்றும், உபயமானால் நடுவழியில் சமீபத்தில் மறைவாக இருப்பானென்றும் கொள்ளவும்.

அரிஷ்ட யோகங்கள்:— தேய்பிறைச் சந்திரன் லக்கினத்திலும், கேந்திரத்திலும், எட்டு, பன்னிரண்டாமிடங்களிலிருந்தும் செவ்வாய், இராகு, கேது, சனி முதலிய பாவிகளோடு சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோவிருந்தும், இலக்கினாதிபதி, அஷ்டமாதிபதி, சனி இவர்கள் 6, 12-ஆமிடங்களில் போய் பகை நீசம் பெற்றுமிருந்தால், குழந்தை மரிக்கும்.

மாதுர் பிதுர் அரிஷ்டங்கள்:— சூரியன் 6, 8, 12லும் பிதுர் ஸ்தானாதிபதியை அல்லது பிதுர் ஸ்தானத்தை அல்லது ஐந்தாமிடத்தை செவ்வாய், சனி, இராகு, கேது கூடினாலும், பார்த்தாலும், பிதா அரிஷ்டம். மேலும் அசுவதி, மகம், மூலம், கார்த்திகை, உத்திரம், உத்திராடம், பூசம், பூராடம், சித்திரை இவைகளுக்கு முதற் பாதமும், அஸ்தம், பரணி 3-ம் பாதமும், ஆயிலியம், கேட்டை, ரேவதி 4-ம்பாதமும் பிறக்க பிதா அரிஷ்டமடையும்.

மாதுர் அரிஷ்டம்:— க்ஷீணச்சந்திரன் 6, 7, 8, 12லும் மாதுர்ஸ்தானாதிபதியை அல்லது மாதுர்ஸ்தானத்தை செவ்வாய், சனி, இராகு, கேது கூடினாலும், பார்த்தாலும், சந்திரன், நாலுக்குடையவன் இவர்களிருந்த இராசி நாதர்கள் 6, 8, 12-ஆ மிடங்களிலோ, நீசமடைந்தோ இருந்தாலும், மாதுர்ஸ்தானாதிபதி 6, 7, 8, 12லிருந்து பாவிகளால் பார்க்கப்பட்டோ அல்லது கூடப்பட்டோ

விருந்தாலும், ஆயிலியம் 4-ம்பாதம், அசுவதி 1-ம்பாதம், உத்திரம் 1, 2-ம் பாதம், பூசம் 2, 3-ம் பாதம், பூராட[ம்] 3-ம் பாதம், சித்திரை 1, 2-ம் பாதம் இவைகளி[ல்] பிறந்தாலும், மாதுர் அரிஷ்டம்.

மாமன் அரிஷ்டம்:—புதன் 6, 8, 12 ஆமிடங்களிலும் ஐந்தாமிடத்தில் சனி, செவ்வாயிருந்தாலும், ரோகிணி நக்ஷத்திரத்தில் பிறந்தாலும், புதனை செவ்வாய் முதலிய பாவிகள் கூடினாலும், பார்த்தாலும் மாமன் அரிஷ்டம்.

சகோதர அரிஷ்டம்:— மூன்றாமிடத்தில் செவ்வாய் இராகு, கேது, விருக்கினும், பார்க்கினும், மூன்றுக்குடை[ய]யோன் பகை நீசமாகியோ, 6, 8, 12 ஆமிடங்களில் போய் மறைந்தோவிருக்கின் சகோதர நாசமாகும். அன்றியும் 3க்குடையவனும் செவ்வாயும் 6, 8, 12, ஆ மிடங்களி[ல்] போய் கெட்டுவிடினும் சகோதரம் மறைவுறும்.

மூன்றில் சனி, புதன் இருந்தாலும், பார்த்தாலும் மூன்றுக்குடையவனைக் கூடினாலும் பார்த்தாலும், மூன்றுக்குடையவன், செவ்வாய் பகை நீசமடைந்தாலும், சகோதர முண்டாவதில்லை.

புத்திர அரிஷ்டம்:— ஐந்தாமிடத்தில் செவ்வாய், இராகு இருந்தாலும், பார்த்தாலும், ஐந்துக்குடையவனை செவ்வாய், இராகு கூடினும், அல்லது நோக்கினும், ஐந்துக்குடையவன், வியாழன் இவர்கள் 6, 8, 12ஆமிடங்களில் பகை நீசமானாலும், இரண்டுக்குடையவன் கெட்டுவிடினும் இவ்வாறே கர்மாதிபனும் ஆகிவிடில் புத்திர அரிஷ்டமே உண்டுபண்ணும்.

புத்திரஸ்தானத்தை சனி, புதன் மேவினாலும், பார்த்தாலும் புத்திர ஸ்தானாதிபதியைக் கூடினாலும், நோக்கினாலும், குரு, குடும்பாதிபதி நீசமானாலும், மறைவு பெற்றாலும் புத்திரனுண்டாவதில்லை.

புத்திர ஸ்தானத்தை அல்லது புத்திரஸ்தானாதிபதியை, சுக்கிரனை; சனி, இராகு, கேது, கூடவோ நோக்கவோ விருந்து, குரு, குடும்பாதிபதி, கர்மாதிபதி பலக்கில் இவனுக்கு விபசாரத்தால் புத்திர பாக்கிய முண்டாகும்.

புத்திரஸ்தானத்தை அல்லது புத்திர ஸ்தானாதிபதியை வியாழன், சனி, புதன்மேவ அல்லது பார்க்க கர்மாதிபதி குடும்பாதிபதி பலிஷ்டர்களானால் தெத்துப் புத்திர யோக முண்டு.

களத்திர அரிஷ்டம்:— 2க்குடையவன், 7க்குடையவன், 4க்குடையவன், சுக்கிரன் இவர்கள் 6, 8, 12ஆமிடங்களில் பகை, நீசம், பாவர் திருஷ்டி அல்லது சம்பந்தம் பெற்று சுபர் கூடாதும் பாராது மிருக்கில் களத்திரமரிஷ்டமடையும். எத்தனை களத்திரம் நேர்ந்தாலும் நாசமாகும்.

சுக்கிரன் 7க்குடையவன், 2க்குடையவன், இலக்கினாதிபதி இவர்கள் 6, 8, 12ஆமிடங்களில் போய் மறைவு பெற்றும் நீசமடைந்து மிருக்கில் விவாகமே யில்லை.

எத்தனை சுபக்கிரஹங்கள் 2, 7ஆ மிடங்களில் நிற்கின்றனவோ அல்லது 2, 7ஆ மிடங்களைப் பார்க்கின்றனவோ அத்தனை களத்திரம் அணைகுவனென்றும்

எத்தனை பாபக்கிரஹங்கள் 2, 7ஆ மிடங்களிலோ, அல்லது 2, 7க்குடையவனையோ கூடுகின்றனவோ அல்லது பார்க்கின்றனவோ அத்தனை களத்திரம் நாசமடையும்.

இரண்டாமிடத்தை அல்லது நான்காமிடத்தை பாவிகள் கூடினும், நோக்கினும், ஏழாமிடத்தை பாவிகள் கூடினும், நோக்கினும், களத்திரம் ரோகமுள்ளதா யிருக்கும். பத்தாமிடத்தை சனி முதலிய பாவிகள் கூடினும், நோக்கினும், பத்துக்குடையவனும், ஏழுக்குடையவனும் நீசம் பாவிகளின் திருஷ்டி சம்பந்தத்துக்கு உட்பட்டவனாக இருந்தால் களத்திரம் விபசாரியாவாள். சுக்கிரன் ஏழில் நிற்க, சனி, செவ்வாய் பார்க்கினும் கூடினும் பெண்ஜாதி விபசாரியாவாள்.

இலக்கினாதிபதி நீசனாகியோ, சனி, இராகு, கேது, மாந்தி, சுக்கிரன் கூடவோ, பார்க்கவோ இருப்பானாகில் தாசி சகவாசம் பண்ணுவன், அபக்யாதி, மூடத்தனம், துர்நடத்தை யுள்ளவனாவன்.

தீர்க்கரோகி:— இலக்கினாதிபதி, சூரியன் இவர்கள் நீசமானாலும், 6, 8, 12 ஆமிடங்களில் சனி இராகு, கேது கூடப்பார்க்க இருந்தாலும், 6, 8, 12 க்குடையவர்கள் சனி, கேது, இவர்கள் இலக்கினத்தி லிருந்தாலும், கர்மாதிபன் இவர்களுடன்கூட கர்மரோகமும் சதா ரோகமுமுள்ளவனாக விருப்பான்.

நித்தியதரித்திரன்:— சனி, கேது இவர்கள் 1, 2, 4, 5, 7, 9, 10, 11 இந்தஸ்தானங்களிலிருந்தாலும், பார்த்தாலும், 6, 8, 12க்குடையவர்கள் மேற்கூறியஸ்தானங்களி

னின்றாலும் பார்த்தாலும், மேற்கூறிய ஸ்தானாதிபதிகள் 6, 8, 12 ஆமிடங்களிற் போய் மறைந்தாலும் பாக்கிய ஹீனனாவான்.

அங்கஊனம், துர்க்குணம், பைத்தியம்:—இலக்கினாதிபதி நீசனாய் சூரியன், சனி, கேது இவர்களுடன் கூடின் சரீரம் ஊனமாகும். இலக்கினத்தில் சனி இருந்தாலும், இலக்கினாதிபன் நீசமாகியோ 6, 8, 12ல் மறைவு பெற்றிருந்தாலும், சரீரம் ஊனமாகும். இவர்களுடன் சுக்கிரன் 2க்குடையவன் பகை நீசமாகிக் கூடினும் நேத்திர ஊனமாகும்.

இலக்கினத்தை, இலக்கினாதிபதியை சனி, செவ்வாய், கேது கூடினும் நோக்கினும் இலக்கினேசன் நீசனாலும் துர்க்குணம், லோபம், ரோகம், மூடத்தனம், அபகீர்த்தி, கொடூரஸ்வபாவம், வம்சநாசம், தேசாந்தராடனம், அடங்காத்தனம். பைத்தியம், ஆகிய இவைகளுண்டாகும்.

அந்தகன், ஊமை:—இலக்கினாதிபதி, சூரியன் இரண்டுக்குடையவன் சுக்கிரன் இவர்கள் துர்ஸ்தானங்களில் மறைந்தோ, பகை நீசமாகியோ விருந்தால் குருடனாவன் இவர்களில் யாராவது ஒருவர் பலக்கில் மாலைக்கண்ணனும். அல்லது நேத்திரரோகமாவது சம்பவிக்கும். இலக்கினாதிபதி சூரியன், இரண்டுக்குடையவன் இவர்கள்பலம் பெற்றிடில் நல்ல நேத்திரமுள்ளவன். இலக்கினாதிபதி, ..தன் இரண்டுக்குடையவன் ஆகிய இவர்கள்6, 8, 12ஆமிடங்களி விருந்தாலும், பகை நீசமானாலும்,

பாவி சத்துருக்களால் கூடப்பார்க்கப்பட்டிருந்தாலும், ஊமையாவன் இலக்கினாதிபதி பெலம் பெற்றிடில் அவலக்ஷணமான வார்த்தையுடையவன்.

யாதொரு பாவாதிபனும் காரகனும் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்றும் கேந்திரம், திரிகோணம், தனலாப ஸ்தானங்களில் அந்தந்த இலக்கினத்துக்கு நட்பான சுபர்களின் திருஷ்டி அல்லது சம்பந்தம் பெற்றுமிருக்கில், சுபாதிபத்திய முள்ளவனாகில் சுபபலன் விர்த்தியாயும், பாவியாகில் அசுபபலன் அற்பமாயும் கொடுப்பான்.

யாதொரு பாவாதிபனும், காரகனும் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்றும் கேந்திரம், திரிகோணம் தனலாப ஸ்தானங்களில் அந்தந்த லக்கினத்துக்கு நட்பான பாவிகளின் திருஷ்டி அல்லது சம்பந்தமுள்ளவனாகி அசுபாதிபத்தியமுள்ளவனாகில் அசுபபலன்விர்த்தியாயும்சுபனாகில் சுபபலன் அற்பமாயும் கொடுப்பான்.

யாதொரு பாவாதிபனும், காரகனும், 6, 8, 12 ஆமிடங்களிலோ, பகை நீசமாகியோ பலிஷ்டர்களான பாவிகளின் திருஷ்டி, சம்பந்தத்தையடைந்தோ விருக்கின் முற்றிலும் மாறான பலனையே கொடுப்பார்கள். (முன்பக்கங்களிற் காண்க)

ஐந்தாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் ஜாதகன் வாழ்நாளில் அடையவேண்டிய சகல புருஷார்த்தங்களை எங்ஙனமடைவானென்பதை விளக்குவோம்.

சுருக்கமாக ஒருவன் விரும்புவது:—

(1) தீர்க்கமான ஆயுள். (2) தேகசௌக்கியம் (3) பொருள். (4) சுகம். (5) மக்கட்செல்வம். (6) மரியாதை, கௌரவம். (7) சம்பாத்தியம், லாபம். (8) நல்ல மரணம் ஆகிய இவைகளாம்.

(1) திரிகோணம், கேந்திரம் இவைகளில் இலக்கினாதிபதி, அஷ்டமாதிபதி, தசமாதிபதி, சனி இவர்கள் அத் தானாதிபர்களுடன் நட்பாட்சி உச்சராய், அம்சையில் கெடாதும், சராராசியிலுமிருக்கில் உத்தமமான தீர்க்காயுள் பெறுவர். இவர்களில் பெரும்பான்மையோர் 6, 8, 12 ஆமிடங்களிலோ, பகை நீசமாகியோ, பாவிகளின் அதிகாரத்துக்கடங்கியோ ஸ்திர உபய ராசியிலோ யிருக்கில் அற்பாயுளாகவும், மத்திம ஆயுளாகவும் சமயோஜிதம்போல் கொள்க.

2. தேக சௌக்யம்:— இலக்கினாதிபதி, சூரியன் இவர்கள் மித்துருவாய் நாலுக்குடையவனுடன் கூடி நான்கிலோ மற்ற கேந்திர கோணங்களிலோ விருந்து இலக்கினத்தில் சுபர்கள் நிற்கப்பார்க்க ஜாதகன் தேக சௌக்கியவானாகவும், சுகியாகவுமிருப்பான். இதற்கு

மாறாக, லக்கினத்திலும், நான்கிலும் பாவிகளிருக்க, லக்கினாதிபதி, சூரியன் நான்கிற்குடையோன், 6, 8, 12லோ பகை, பாவர் க்ஷேத்திரங்களிலோ, பகை பாவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டோ விருந்தால் ஜாதகனுக்கு தேக சௌக்யமுமில்லை, சுகமுமில்லை.

3. பொருள்:— கெட்டாதிபத்தியமில்லாத இலக்கினாதிபதி, கேந்திர திரிகோணாதிபதிகள், தனலாபாதிபதிகள் ஆகிய இவர்கள் மேற்கூறிய ஸ்தானங்களில் பலிஷ்டர்களாயினும், ஒருவர் ஸ்தானத்திலொருவர் மாறியிருந்தாலும் முக்கியமாக இலக்கினம், தனம், பாக்கிய இந்த இடங்களில் சனி யிராமலும், பாராமலுமிருக்கில் ஜாதகனுக்கு செல்வமும், புகழும், மாடகூடமும், பூமி வாகன பாக்கியங்களும் உண்டாகும்.

இதற்கு மாறாக கேந்திர திரிகோணாதிபதிகள், தனலாபாதிபதிகள் ஆகிய இவர்கள், 3, 6, 8, 12 ஆமிடங்களிலோ, 3, 6, 8, 12க்குடையவர்கள் உத்தம ஸ்தானங்களிலிருக்க முக்கியமாக இலக்கினம், இரண்டாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம் இவைகளில் சனி, கேது நிற்க அல்லது பார்க்க பொருளில்லை ஏழையாம்.

4. சுகம்:— நாலுக்குடையவன், மூன்றுக்குடையவன் இவர்கள் வியாழன், சுக்கிரன், புதன், விருத்தி சந்திரனாக, கேந்திரம், திரிகோணம், தனலாப ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம்பெற்று நட்பான தர்மகர்மாதிபதிகள் கூடப்பார்க்க ஜாதகன் சுகவான். போகபோகியவான், சுகபோஜனவான், தியாகி, உத்ஸாகி சீமான்.

5. மக்கட் செல்வம்:— 2, 5, 9க்குடையவர்கள் கேந்திரம், திரிகோணம் தனலாப ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம்பெற 2, 5, 9க்குடையவர்களையோ, 2, 5, ஆமிடங்களையோ பாவிகளும் செவ்வாய், சனி, இராகு, கேது முதலானவர்களும் கூடாமலோ, அல்லது பாரா மலோ விருக்கில் மக்கட் செல்வமுண்டு. அவைகளில் ந்திரன், சுக்கிரன், சனி இவர்களால் பெண் சந்ததியும் தரர்களால் ஆண் சந்ததியும் உண்டாகும்.

2, 5, 9, 10க்குடையவர்கள் 6, 8, 12ஆ மிடங்களில் கை நீசமானாலும் 2, 5, 9, 10 இந்த இடங்களில் பாவி ளும் சனி, கேது, மாந்தி, புதன் இவர்களும் இருந்தாலும் ந்ததி இல்லை யென்றும் காண்க.

(6) கௌரவம்:— (a) உத்தியோகம் (b) பொருள்) வித்தை இம்மூன்றும் ஆவசியகமாயிருப்பதை உற்று நாக்குக.

உத்தியோகம்:—இலக்கினாதிபன் கர்மாதிபன் நான் ற்குடையவன் இவர்கள் சுபஸ்தானங்களில் பலம் பாருந்தி யிருக்கில் உத்தியோக முள்ளவன் அதனால் யாபகமுள்ளவ னென்றுமறிவது. ஐந்துக்குடையவனை ணி, கேது பார்க்கினும், கூடினும், 10 ஆமிடம், 5ஆ டம் இலக்கினம். இவ்விடங்களிலிருக்கினும் ஜாதகன் ற்பன் என்றும் மிகவும் சாமான்னியனென்றும், அப ர்த்தி யுள்ளவனென்றும் அறிக.

பொருளினால் கௌரவத்தை அடைவது சகஜம். பாருள் அடையும் யோகம் முன்னால் விவரிக்கப்பட்டது.

வித்தை:—1, 2, 4 க்குடையவர்களும், புதனும், வியாழனும், சுக்கிரனுமாகிய இவர்கள் உத்தமஸ்தானங்களில் சனி, கேது திருஷ்டி சம்பந்தமன்னியி விருக்கவும் 1, 2, 4 இந்தஸ்தானங்களுக்குச் சனி, கேது இவர்களின் திருஷ்டி அல்லது சம்பந்தம் இல்லாதிருக்கவும், ஜாதகன் வித்தையில் தேர்ச்சியுள்ளவனாகவும், அதனால் கியாதியுள்ளவனாவன்.

(7) சம்பாத்தியம்:—1, 2, 4, 10, 11 க்குடையவர்கள் (சூரியன், சந்திரன், இவர்களல்லாமல் ஏனையோர்களாக) உத்தமஸ்தானங்களில், பெலம்பெற சூரியன், சந்திரன் இவர்கள் கூடாதும் நோக்காது மிருக்கில் ஜாதகன் இராஜத்வார மன்னியில் இதர மூல்யத்தினால் அதாவது கம்பேனி,ஷாப்பு,கடை (Private business) இவைகளினால் சம்பாதிப்பன்.

1, 2, 4, 10, 11 க்குடையவர்கள் சூரியன் சந்திரனாக வந்தாலும், சூரியன், சந்திரனிவர்களின் திருஷ்டி சம்பந்தத்தையடைகினும் இராஜாங்கத்தில்சம்பாத்தியமுள்ளவன். மேலும் 1, 2, 4, 10, 11 இந்த இடங்களில் சூரியன், சந்திரனிற்கினும், பார்க்கினும் 1, 2, 4, 10, 11, க்குடையவர்கள் சூரியன், சந்திரன் ஆகிய இருவர் வீட்டிலிருக்கவும் இராஜாங்கத்தில் சம்பாத்திய முள்ளவன்.

தொழில் நிர்ணயம்:—

சூரியனால்:— Forest Department, Taluk Board, District Board, Collectorate, Municipality, Local

Fund, Engineering Department Dispensary இந்த இலாக்காக்களில் தொழிலைக் கொடுப்பான்.

சந்திரனல்:—Judicial and Excise Departments இவைகளில் தொழிலைக் கொடுப்பான்.

சேவ்வாய்:—Military, Police, Jail, Labour, Surgery இந்த இலாக்காக்களில் தொழிலைக் கொடுப்பான்.

புதன்:— Government Press, Government Stationery, Registration, Schools, Colleges, Education Department இவைகளில் தொழிலைக் கொடுப்பான்.

வியாழன்:— Revenue, Treasury, Post Office, Bank.

சுக்கிரன்:— Marine Department, Excise Department, Railway Department.

சனி:— Servitude in all the Departments such as peons, sweepers etc.

1, 2, 10, 11க்குடையவர்கள் வியாழன், புதன், சுக்கிரனுக இவர்களே ஒருவர்க்கொருவர் கூடிக்கொண்டும், பார்த்துக்கொண்டும், சூரியன், சந்திரன் ஆகிய இவர்களின் எவ்வித சம்பந்தம், நோக்கு, இராசி ஸ்திதி இவைகளை யடையாதிருப்பதைக் கொண்டும் கீழ்கண்டவாறு தொழில் நிர்ணயிப்பது.

(1) வியாழனல்:— தர்மசாஸ்திர புராணங்களினுலும், வைதீக கர்மாக்களினுலும் சம்பாத்தியம்.

(2) புதனல்:— ஜோதிஷத்தினுலும், வாக்கு வல்லமையினுலும் (வக்கீல் தொழில்) வியாபாரத்தினுலும், சித்திரம், (Photo) பதுமை விக்கிரயங்களினுலும், உபாத்திமைத்தொழிலினுலும், சங்கீதம், நாட்டியம் இவைகளாலும் திரவியம் தேடுவன். மேலும் அச்சு வேலைகளினுலும், புத்தக விக்கிரயத்தினுலும் திரவியம் தேடுவன்.

சுக்கிரன்:— வைதீக கர்மாக்களாலும், சிருங்கார வித்தைகளினுலும், வியாபாரத்தினுலும், ஸ்திரீகளினுலும், சாஸ்திரத்தினுலும், வெள்ளி, குதிரை, வாஹனம் இவைகள் விக்கிரயங்களினுலும், கரவைகளினுலும் திரவியம் தேடுவன்.

சனி:— சுமை சுமப்பதும், பொய் சாட்சி சொல்லுதலும் வழிநடப்பதும், துப்பு அறிவதும் கோட் சொல்வதும், வழக்கு மூட்டுவதும் துர்நடத்தை அப்பியாசம் பண்ணுவதுமாகிய இவைகளால் திரவியம் தேடுவன்.

இராகு கேது:— மாயா ஜாலங்களினுலும் பொய், பிரட்டு, பில்லிசூன்யத்தினுலும், விஷ பரீக்ஷைகளினுலும் மந்திர வித்தைகளினுலும் சர்க்கஸ் வித்தைகளினுலும் திரவியம் தேடுவன்.

நல்லமரணம்:—ஜாதகனின் ஜென்ம லக்கினத்துக்கு எட்டாமிடம் மரணம் என்று முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த எட்டாமிடத்தில் சனி முதலான பாவிகள் ஒன்றுமில்லாமல் இலக்கினுதிபதி இந்தப் பாவிகளின் திருஷ்டிக்குள்ளோ, சம்பந்தத்துக் குள்ளோ

அகப்படாமல் சுபர்களின் திருஷ்டியையோ, சம்பந்தத்தையோ அடைவானுகில் ஜாதகன் அடைவது நல்ல மரணமேயாகும். இல்லாவிடில்,

சனியால்:—பிணியாலும், வருமையாலும், சரீரஊனத்தாலும், வாதம், ஜன்னியாலும், பசியாலும், சிறைவாசத்தாலும், அவமானத்தாலும்.

செவ்வாயால்:—சடுதிமரணம், சரீரச்சின்னபின்னம், ஜுரம், அக்கினி, வெடிமருந்து, விஷத்தாலும் நாற்காற் பிராணியாலும்.

சூரியனுல்:—மரத்தாலும், கல்லாலும், மலையாலும், நாற்காற் பிராணியாலும்.

இராகு கேது:— பைத்தியத்தாலும், சித்தப்பிரமையாலும், சரீர ஊனத்தாலும், துர்தேவதா சாபத்தாலும், விஷப் பரீக்ஷையாலும், உயர்ந்த ஸ்தலத்தாலும், மரணம் சம்பவிக்கும் (Plague & Cholera)

நல்லமரணமென்பது:— சரீரம் நோயிலழுந்தாது ஞாபகம் குன்ருது ஒரு குறைச்சலுமின்றி சகல வைபவத்துடனும் ஈஸ்வரதியானத்துடனும் ஆசாரத்துடனும் சிலாகிக்கத்தகுந்த முறையில் ஆவியானது இவ்வுடலை நீங்கும் மரணத்துக்கு நல்லமரணம் எனப்பெயர் வழங்கும் இதுவும் ஒரு யோகமே.

ஆருவது அத்தியாயம்

இந்த அத்தியாயத்தில் நவக்கிரகங்களின் தசாபுக்தி காலங்களின் அளவும் அவைகளில் நடக்கும் பலன்களைக் கூறுவோம்.

முன்னர் ஜென்மலக்கினத்துக்கு 5, 9 க்குடையவர்களும் 1, 4, 7, 10 க்குடைய சனி, செவ்வாய், சூரியன் இவர்களும் சுபர்களென்றும்.

3, 6, 8, 11 க்குடையவர்கள் பாவிகளென்றும்.

5, 9 க்குடையவர்கள் 3, 6, 8, 11க்குமுடையவர்களானுல் அவர்கள் சுபரும் பாவியுமாவார்களென்றும்.

2, 12க்குடையவர்கள் மிகவும் சாமான்னியர்களென்றும், இவர்கள் 5, 9 க்குடையவர்களானுல் சுபர்களென்றும், 3, 6, 8, 11க்குடையவர்களானுல் பாவிகளென்றும், கேந்திராதிபத்திய தோஷம் உள்ளவர்களானுல் பாவிகளென்றும், கேந்திராதிபத்திய தோஷமற்றவர்கள் 2, 12க்குடையவர்களானுல் சுபர்களென்றும், இதற்கு முன்னுல் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை நிதானித்தபிறகே தசாநாதனுடைய (1) இராசிஸ்திதி (2) திருஷ்டி சம்பந்தம் முதலியவற்ருல் பலனை நிரூபிக்கவேணும்.

இவ்வாறே புக்தி நாதனுடைய சுபாசுபத்தன்மையை நிதானித்தபிறகு (1) இராசிஸ்திதி (2) திருஷ்டி சம்பந்தம் (3) தசாநாதனுக்கும் புக்திநாதனுக்குமுள்ள சத்துரு மித்துரு சமன் ஸ்திதி இவைகளையும், சீர்தூக்கி ஆராய்தல் வேண்டும்.

இவ்வாறே சித்ரநாதனுடைய யோக்யதையை அறியவேண்டும். இவைகளை அனுசரித்தே தசாபுக்தி சித்ரம் முதலிய பலன்கள் அறியப்படும்.

சூரியதிசை வருஷம் 6:—கேந்திர திரிகோணாதிபத்தி
யம் பெற்ற சூரியன் கேந்திரம், திரிகோணம், தனம்,
லாபம், உபஜய ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம்
பெற்று நட்பான தர்மகர்மாதிபதிகள், சுபாதி பத்திய
முள்ள இலக்கினேசன் இவர்களின் திருஷ்டி, சம்பந்தம்
பெற்று அம்சையிலும் நீசம், பகை, பாவர் சமுஸர்க்கமன்
னியிலிருக்க இப்பேர்ப்பட்ட சுபமான சூரியதிசையில்
இராஜாங்க யசஸ்ஸும்உயர்ந்த பதவியும்,பிதுர்தீர்க்கமும்,
பிதுர்பாக்கியமும், கீர்த்தி சரீர வல்லமை நல்ல தர்ம
காரியம், சிவபக்தி, சிவகைங்கர்யம், சிவாலய தரிசனம்,
நாயுடு, முதலி இவர்களின் சிநேகமும், மாடமாளிகை
விர்த்தியும், சரீரபோஷணையும், புத்திரசம்பத்தும்,
யோகாப்பியாசமும், சைவானுஷ்டானமும், மலைப்பிர
தேச சஞ்சாரமும், உண்டாகும். இவர் கொடுக்கும்
இராஜாங்க உத்தியோகப்பதவி முன்னர் 5வது அத்தியா
யத்தில் சொல்லியபடி Forest Department முதலியன.

3, 6, 8, 11க்குடையவனை சூரியன் பாவியெனச்
சொல்லப் பட்டிருக்கிறது. 12க்குடைய சூரியனை பாவி
யென்றும் 2க்குடைய சூரியனை சாமான்னியனென்றும்
முன்னர் சொல்லியிருக்கும் பிரகாரம் வருவிக்கப்பட்டது.

3, 6, 8, 11, 12க்குடைய சூரியன் நிஸர்க்க பலத்தில்
சிறந்தவனாயிருப்பதாலும் கேந்திரம் திரிகோணம் தனம்
லாபஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சனாய் சுபர் யோக
காரகர்களின் திருஷ்டி, சம்பந்தம் பெறாமல் வலிமையா
யிருக்கில் இராஜநிஷ்டூரமும். தாழ்மையும் சரீரரோகமும்,
அலைச்சலும், விவகாரமும், அவமதிப்பும் உண்டாகும்.
அன்றியும் மேற்கூறிய இலாக்காக்களில் சாமான்னிய
உத்தியோகப் பதவியுண்டாகும்.

சூரியன் பாபஸ்தானங்களில் பகை, நீசம்பெற்று
பாவர் சத்துருக்களின் திருஷ்டி, சம்பந்தம் பெறின்
தனது தசாபுக்திகாலங்களில் பிதுர் அரிஷ்டமும், உத்தி
யோக ஹானியும், முயற்சிக்குறைவும், ரோகபீடித
மும், பித்தம், ஜ்வரம், வைசூரி இவைகளால் உபாதியும்,
குடும்ப ஹானியும், துக்கமும், சுகமின்மையுமாகிய
கொடிய கஷ்டபலன்கள் நடக்கும்.

மிகவும் சாமான்னியமான சூரிய திசையில் அல்லது
பாவர்களுக்கு மத்தியிலுள்ள சுபனான சூரிய திசையில்
ஜாதகன் கொஞ்சம் திரவியலாபமும் ஸ்தானசலனமும்,
பிதுர்பீடனமும், அலைச்சலும், தாழ்மையான உத்தி
யோகமும், சரீரச்சோர்வும், விவகாரமும், அபக்யாதியும்,
சிலவும், சிற்சில சமயங்களில் சத்விஷயங்களில் பரிசிர
மும், ஜ்வரம், பித்தம், உஷ்ணம் இவைகளால் சரீர
உபாதியும் நடக்கும்.

மேற்கூறிய சுபா சுபப் பலன்கள் சூரிய தசா, புக்தி,
சித்ர காலங்களில் நடக்குமென்றறிவது.

சந்திரதிசை ௵ 10:-கேந்திர திரிகோணாதிபத்தியம்,
தனலாபாதி பத்தியம்பெற்ற சந்திரன் கேந்திர திரி
கோணம் தனலாபஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம்
பெற்றும் சுபர், யோககாரகர்களின் திருஷ்டி சம்பந்தம்
பெற்றுமிருக்கில் மகத்தான சுகபோகங்களும், கல்வித்
தேர்ச்சியும், வீடுமாடகூடங்களும், பசு, பால் விர்த்தியும்
வாஹன பூஷணாதிகளின் லாபமும், மாதா தீர்க்கமும் நல்ல
புத்தி, யுக்தி, அனுபவச்சேர்க்கையும், தீர்த்தயாத்திரைப்

பலனும், சுபசோபனுதிகளும், வீடு கட்டலும், தடாகம், கிணறு உண்டாக்கலும், தூரதேசப்பிரயாணமும், நன் மதிப்பும், சாந்தகுணமும், சௌபாக்கியமும், சந்திரன் பெண்கிரகமானதால் பெண் பிரஜை உற்பத்தியும் உண்டாகும். இவர்கொடுக்கும் உத்தியோகப்பதவி 5-வது அத்தியாயத்தில் பார்க்க. சந்திரன் சுபனுனபோதிலும் பாவிகளின் சேர்க்கையோ, திருஷ்டியோ பெறினும் அல்லது பாவிகளின் வீட்டிலிருக்கினும் சத்துருக்களால் அடக்கப்பட்டிருக்கினும் இப்பேர்க்கொத்த சந்திரன் திசையில் ஜாதகனுக்கு மாதா நாசமும், புத்தித்தாழ்வும்; அவமரியாதையும், வித்தியாபங்கமும்; கன்று, காலி நாசமும், கடன், ரோக பாதையும், மாதுர் வர்க்கத்தினர் அரிஷ்டமும், சகலபோக யோகங்களுக்கு பங்கமும், துக்கமும், தூக்கமும், குடும்பஹானியும் உண்டாகும்.

மேலும் சந்திரன் 3, 6, 8, 11, 12க்குடையவனுய் 3, 6, 8, 11, 12ஆமிடங்களில் நட்பு, ஆட்சி உச்சனுய் சுபர், யோகர், திருஷ்டி, அல்லது சம்பந்தனு யிருக்கில்; மேலே கண்ட சுபபலன்கள் சாமான்னியமாக நடக்கும். கெட்டாதிபத்தியமுள்ள சந்திரன்நீசம்பெற்றுசுபயோகர் திருஷ்டி சம்பந்தம் பெறினும் சுப பலனே நடைபெறும். கெட்டாதி பத்தியமுள்ள சந்திரன் உத்தம ஸ்தானங்களில் பலிஷ்டனுயிருந்தாலும் பாவிகளின் சேர்க்கையையோ அல்லது திருஷ்டியையோ பெறினும் மிகவும் கொடிய கஷ்ட பலன்களைக் கொடுப்பான். சகல சுப யோகங்களைக் குறைத்துவிடுவான். கெட்டாதி பத்திய முள்ள சந்திரன், பாபஸ்தானங்களில் சத்துருபாவி

களின் திருஷ்டியையோ சம்பந்தத்தையோ பெறின் கஷ்டபலனையே கொடுப்பான். அதாவது பல உயிர்ச் சேதங்களும் கடன்பாதையும், சிலவும், ஸ்தானபேதமும், ரோகமும், அவமானமும், நிந்தனையும் உண்டாகும்.

செவ்வாய்திசை வருஷம் 7:—கேந்திர திரிகோணுதிபத்தியமுள்ள செவ்வாய் முதல்தரமான சுபன் 1-6, 1-8, 2-7, 2-9, 5-12, 7-12க்குடைய செவ்வாய், மத்தமமான சுபன். 3-10, 4-11க்குடைய செவ்வாய், அதமமான சுபன். இம்மூவகை சுபத்தன்மைபொருந்திய செவ்வாய், உத்தம சுபயோக ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்றும் நட்பான சுபயோகர், திருஷ்டி, சம்பந்தம் பெற்றுமிருக்கில் இராகு, கேதுக்களின் சம்பந்தத்தை யடையாதிருக்கில், ஜாதகனுக்கு இந்தச்செவ்வாய் திசையில் பூமி சேர்க்கை, விவசாயபலிதம், கிராமாதிபத்தியம், புதையல், லாபம், வீடு கட்டுதல், வாகனுதிகளின் விர்த்தி, அதிகார உத்தியோகம், சகலரையும் அடக்கியாளும் பிரபாவம், தெற்கு திக்கில் பிரயாணம், மகத்தான லாபம், சிவப்புநிறமான தான்னியமோ, வஸ்திரமோ, அணிகலமோ, சித்தி, நாயுடு, வடுகர், க்ஷத்திரியர் இவர்களின் நன்மதிப்போ, லாபமோ உண்டாகுமென்றும், சுப்பிரமணியர் பக்தி, ஞானம், தர்மகாரியச் சிலவுகளும், வைத்திய சிகிச்சையில், அல்லது இரண வைத்தியத்தில் பெயரும் பிரதாபமும் உண்டாகும்.

3, 6, 8, 12க்குடைய செவ்வாய் கேந்திரகோணம், இரண்டாமிடம் இவைகளில் பகை, பாவர், திருஷ்டி சம்பந்தமன்னியில், சுபர், யோகர், திருஷ்டி சம்பந்தம்

பெறின் மேற்கண்ட சுபப்பலன்கள் மத்திம நிலைமையில் உண்டாகும். 3-10, 4-11க்குடைய செவ்வாய் உத்தம ஸ்தானங்களில் சுபர், யோகர் திருஷ்டி சம்பந்தம்பெறின் மேற்கண்ட சுபப்பலனே யுண்டாகும்.

3-10, 4-11, 3, 6, 8, 12க்குடைய செவ்வாய் கேந்திரம், திரிகோணம், குடும்பம் இந்த ஸ்தானங்களில் ஆட்சி, உச்சம் பெறினும் பகை, பாவர், திருஷ்டிசம்பந்தம் பெறினும் ஆப்த பந்து நாசமும், குடும்ப நாசமும், கடன் பாதையும், பூமி போதலும் அல்லது விபசாய பலிதமின்மையும், கோபவிபாதங்களால் அனர்த்தங்களும், விரோதமும், ரிணரோகமும், ரக்தப்போக்கும் அக்கினி, ஆயுதபயமும், அவமானமும், களவும், நிந்தனையும் கைகண்ட பலனும்.

மேற்கூறிய வாதிபத்தியமுள்ள செவ்வாய் 3, 6, 8, 12ஆமிடங்களில் பகை, பாவர், திருஷ்டி சம்பந்தம் பெறின் கொடிய கஷ்டபலனே நடக்கும். சகோதரம், மக்கள் நாசமும், ஆப்த பந்து நாசமும், களத்ர ஹானியும், சுரம், பித்தம், ரணம் இவற்றால் உபாதியும், சிலவும், அவமானமும், கலகமும், அக்கினி, ஆயுதபயமும், ஆக்கினையும், சோரமும் நடக்கும்.

1-6, 1-8, 2-7, 7-12க்குடைய செவ்வாய் திசையில் ஜாதகனுக்குச் செவ்வாய் உத்தம சுபஸ்தானங்களிலிருக்க சுபப்பலனும், கஷ்டபலனும் சமரஸமாய் நடக்கும்.

பாப ஸ்தானங்களில் சத்துருபாவர் திருஷ்டி, சம்பந்தமன்னியிலிருக்கில் சுபப்பலனே நடைபெறும். சத்துரு, பாவர் சம்பந்தமோ, திருஷ்டியோவிருக்கில், கொடிய கஷ்ட பலனும் நடக்கும்.

2-9, 5-12க்குடைய செவ்வாய் மத்திமமான சுபனெனச் சொல்லப்பட்டிருக்கிறது. சுபயோக ஸ்தானத்தில் வீர்யம் பெற்று, சுபயோகர், திருஷ்டி சம்பந்தம் பெறினும், சுபயோகப்பலனாகும். இராகு, கேது சம்பந்திக்க மூடமான பலனே கொடுப்பான். அதாவது சுபபலன் நிஷ்பலனாகும். பாப ஸ்தானங்களில் தமோகிரக சம்பந்தனாய் அல்லது திருஷ்டி பெற்றவனாய் இதர பாவிகள் நோக்க அல்லது சேர செவ்வாய் கொடுப்பது அசுப பலனாகும். இவன் கொடுக்கும் இராஜாங்க உத்தியோகம் -வது அத்தியாயத்தில் சொல்லியவாறாகும்.

இவன் கொடுக்கும் உபாதிகளாவன:— புண், கொப்பளம், விஷம், அக்கினி, ஆயுதபயம், ஜுரம், உஷ்ணம், குஷ்டம், கருவழிவு ஆகிய கொடிய கஷ்டங்களாம்.

இராகு திசை வரு 18:—ஆதிபத்தியமில்லாத இராகு லக்கினத்துக்கு கேந்திர திரிகோணமாகிற மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் இந்த இடங்களிலிருக்க பாவிகளின் திருஷ்டி, சம்பந்தமன்னியிலிருக்க சுபர்களின் திருஷ்டி சம்பந்தம் பெற மகத்தான சுபயோகப்பலனே கொடுப்பான். இந்த சுபமான இராகு திசையில் ஜாதகன் நல்ல சுகபோகங்களையும், ஐஸ்வரியத்தையும், ஞானத்தையும், தர்மங்களையும், மக்கட்பேறையும், ஸ்நாநாதிகப்

பலனையும், மந்திரவித்தையும், சகல பிரபஞ்சத்தை அறியும் வல்லமையும், யோகாப்பியாசமுறையும், துர் தேவதா உபாஸனையும், பில்லி, சூனியம் வைக்கவோ, எடுக்கவோ இவைகளில் வல்லமையும், ரஸவாத வித்தையும், அடைகிறான்.

இராகு உத்தம ஸ்தானங்களிலிருந்தும் பாவி, சத்துருக்களின் திருஷ்டியையோ, சம்பந்தத்தையோ அடைவானாகில் கொடிய கஷ்டத்தையும், மகத்தான ரோகத்தையும், யோகபங்கத்தையும், அவமானத்தையும், கொடிய துர்க்குணத்தையும் தருகின்றான். இராகு பாப ஸ்தானங்களிலிருக்க அத்தானாதிபதி சம்பந்தத்தையோ திருஷ்டியையோ பெறுதும் சுபர், யோகர் இவர்களுடைய திருஷ்டியையோ, சம்பந்தத்தையோ அடைவானாகில் மேற்கூறிய சுபப்பலனையே கொடுப்பான். துர்ஸ்தானங்களிலிருக்கும் இராகு பாவி, பகைவர், திருஷ்டி சம்பந்தம் பெற்றிருந்தால் தரித்திரத்தையும், மரணத்தையும், மரணத்துக்கொப்பான ரோக உபாதியும், யோகபங்கத்தையும், குடும்பவர்க்கத்தினர் வியோகத்தையும், எதிலும் முன்னுக்கு வாராமல் மங்கியிருத்தலையும், யாவராலும் தூஷிக்கப்படுவதையும், கடன்பாதையை அடைதலையும் ஆகிய இப்பலன்களைக் கொடுப்பான்.

வியாழதிசை ஸூ 16 :—1-4, 2-5க்குடைய வியாழன் முற்றிலும் சுபனாவன். 1-10, 4-7, 5-8, 6-9, 7-10, 9-12க்குடைய வியாழன் சுபனும் அசுபனுமாவன்.

சுபனான வியாழன் கேந்திர திரிகோணங்களில் நட்பு, ஆட்சி, யுச்சம்பெற்று பாவர், பகை இவர்களின் திருஷ்டி, அல்லது சம்பந்தமில்லாது சுபர், யோகர் இவர்களின் திருஷ்டி அல்லது சம்பந்தம் பெற்றிருக்கில், புத்திரபாக்கியம், ஐஸ்வரியம், கீர்த்தி, சாமர்த்தியம், புத்தி கூர்மை, சுபசோபனங்கள், சகல சாஸ்திர பரிச்ரமம், சகல ஜனவசீகரம், உத்தியோகம், சத்விஷயம், தர்ம காரியங்கள், பிராம்மண காரியம், வீடு சேர்க்கை, கூபம் தடாகம்உண்டுபண்ணி தர்மம் சம்பாதித்தல், உபதேசம் பெறல், பெரியோர் சகவாசம் ஆகிய இப்பலன்கள் நடக்கும். இவர் கொடுக்கும் உத்தியோகம் 5-ம் அத்தியாயத்தில் காண்க. பாவர், பகை இவர்களின் சேர்க்கை, அல்லது பார்வை சுபனான வியாழனுக்குக் கிடைத்தால் சுப யோகப்பலன் வீணாகப்போய்விடும். அல்லது மிகவும் சாமான்னியமாகவிருக்கும்.

சுபனான வியாழன் 6, 8, 12ஆமிடங்களில் மறைகினும் நீசம், பகை பெறினும் சகல சுபப்பலன்களுக்கு ஹானியாம்.

சுபனும், பாவியுமான வியாழன் உத்தம சுபயோக ஸ்தானங்களில் நட்பாட்சியுச்சனாய் சுபர், யோகர், திருஷ்டி சம்பந்தம் பெறின் சுபப்பலனையே சிறந்து கொடுப்பானென்றும் பாபயுக்தனாகியோ, பாபிகளின் திருஷ்டி பெற்றவனாகியோ, நீசமாகியோ விருந்திடில் சுபப்பலனுக்கு ஹானியும், கஷ்டபலனுமாகும். புத்திர அரிஷ்டமும், யாவராலும் தூஷிக்கப்படலும், தர்மநெறி தவறலும், ஆசாரம் விடுதலும், துக்கமும், தூக்கமும்

கடனும், பொது விஷயத்தில் தலையிட்டு அதனால் கஷ்ட
மடைதலும், ஸ்தானபேதமும், துர்மார்க்கமும், பந்தன
மும், அவமானமும் உண்டாகும்.

2-11, 3-6, 3-12, 8-11க்குடைய வியாழன் பாபி
யென்று சொல்லப்படுகிறது. இந்த வியாழன் கேந்திரம்,
திரிகோணம், தனம், லாபஸ்தானங்களில் நட்பு, ஆட்சி,
உச்சம் பெற்று சுபர், யோகர், திருஷ்டி சம்பந்தம்
பெறின் பெரும்பாலும் நன்மைப்பலனையே செய்கிறான்
என்பது சாஸ்திர சம்மதம்.

துஷ்டாதிபத்தியமுள்ள வியாழன் சத்துரு பாவ
ஸ்தானங்களில் பாவர், பகை இவர்களின் திருஷ்டி அல்
லது சம்பந்தம் பெற்றோ, நீசனாகியோவிருந்தால், பூரா
வும் கஷ்டத்தையே கொடுக்கிறான். அறம், பொருள்,
இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களுக்கு
ஹானியாம்.

சனிதிசை வருஷம் 19:—4-5, 9-10க்குடைய சனி சுபன்
எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச்சனி உபஜய
ஸ்தானங்களான 3, 6, 10, 11 இந்த இடங்களில் நட்பு,
ஆட்சி, உச்சனாய் சுபர், யோகர், திருஷ்டி, சம்பந்தம்
பெறின் ஜாதகன் தன்னிஷ்டப்பிரபுவாயும், செல்வந்த
னாகவும், கிராமபூமியாதிபதியாகவும் இருப்பான். 2, 4, 5,
9 இந்த ஸ்தானங்களில் சனி யிருந்தாலும் ஜாதகன் தன்
னிஷ்டப்பிரபுவா யிருக்கமுடியாது. இதர கிரகங்களின்
பலத்தால் ஜாதகன் செல்வந்தனாவது அனுபவமுறை
யாகும்.

1, 2, 1-12, 3-4, 5-6, 6-7, 7-8, 8-9, 10-11க்குடைய
சனி பாவியும் சுபனுமாவதால் சுபர்களின் திருஷ்டி, அல்
லது சம்பந்தம் பெறினும், சாமான்னிய சுபப்பலனையும்
நட்பு, ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணம் பெறின் விசேஷ
யோகப்பலன்களையும் கொடுப்பானென்றும், சுபர், யோகர்
இவர்களின் திருஷ்டியன்னியில், பகை, பாவர், திருஷ்டி
சம்பந்தம் பெறின் கஷ்ட பலனைக்கொடுப்பான். மேலும்
ஜாதகன் தரித்திரனாயும் எதிலும் ஊக்கமில்லாதவனும்,
சோம்பல், தூக்கம், ஆலசியம் இவையுள்ளவனாகவும்,
அவமானம், நிந்தனை இவைகளுக்குள்ளாவானென்றும்,
கேவலமாய்ப்பெயரெடுப்பவனாகவும், அலைச்சல் உள்ளவ
னாகவும், பொய், களவு, நிஷ்டூரம் உள்ளவனாகவும் இத்
திசையில் இருப்பானென்றும் ஊஹிக்கப்பட்டது. துஷ்
டாதிபத்தியமுள்ள சனி (2-3, 11-12) கேந்திர திரி
கோணங்களில் நட்பு, உச்சனாய், சுபர், யோகர்,
திருஷ்டி சம்பந்தம் பெறின் இத்தசாகாலத்தில் ஜாத
கனுக்கு லாபமும், கிராமம், பூமியாதி லாபமும் கிடைக்
கினும் இடையிடையே மரணத்துக்குச் சமானமான கஷ்
டங்களும், கலகங்களும், ஸ்தான சலனமும், துக்கமும்,
மனைவி, மக்கள், நாசமும், ரோகமும் உண்டாகும். மாரக
லக்ஷணம் வாய்ந்திடில் மரணத்தைச் செய்கின்றான்.

புதன் திசை வருஷம் 17:—சுபாதிபத்தியமுள்ள புதன்,
சுபயோக ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்றும்
சுபர், யோகர் இவர்களின் திருஷ்டி சம்பந்தம் பெற்று
மிருக்கின் வித்தியாபிரபல்மும், பாண்டித்தியமும், சங்
கீத நாட்டிய அபிருசியும், ஜோதிஷம், தமிழ் இவைகளில்

ஞானமும், வியாபாரமும், விஷ்ணுஸேவை, விஷ்ணு ஸ்தல தரிசனம், வாக்குச்சாதுர்யம், நன்மதிப்பு, போகபோக்கியங்கள், மாதுர் வர்க்கம், தீர்க்கம், சுபசோபனங்கள், சம்பத்து, உத்தியோகப்பதவி ஆகிய இப்பலன்கள் பூர்த்தியாய் நடைபெறும். புதன் பாவியானாலும், பாவர், பகை சம்பந்தம், திருஷ்டிபெற்றோ, பகைவீடு, நீசவீடு, பாவர்வீடு இவைகளிலிருந்தால் மாதுர்வர்க்க நாசமும் வித்தியாபங்கமும், வாக்குத்தோஷமும், தொழில் பங்கமும், ஞானசூன்யமும், துக்கமும், அலைச்சலும், விரோதமும் கபம், வாய்வு, உபத்திரவமும், தோல் சம்பந்தமான வியாதியும் உண்டாகும்.

கேது திசை ௵ 7:— கேந்திரகோண, தன லாப ஸ்தானங்களில் கேந்திரகோணாதிபதிகள் கூடப்பார்க்க சுபசோபனங்களும், மக்கள் விர்த்தியும், பாக்கியப்பெருக்கும் உண்டாகும். பகை, பாவர் க்ஷேத்திரங்களிலோ, பகை, பாவர், திருஷ்டி அல்லது சம்பந்தம் பெற்றோவிருந்தால் உற்றார் நாசமும், தரித்திரமும், ஸ்தான சலனமும், சண்டைசச்சரவும், அலைச்சலும், வெறுப்பும், புத்தி ஈனமும், வஞ்சனை, சூதும், ரஸவாதமும், மகத்தான குஷ்டரோகமும் உண்டாகும்.

சுக்கிர திசை ௵ 20:— சுக்கிரன், கேந்திர, கோண தனலாபாதிபதியாகி, கேந்திர, கோண, தனலாப ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று சுபர், யோகர் மித்துருவாய்க்கூடவோ, அல்லது பார்க்கவோ விருக்கில், பிரபலயோகமும், ஐஸ்வரியமும், வாகனாதிகளின் சம்பத்தும், மாடகூடங்களும், பசுவிர்த்தியும், ஸ்திரீசுகமும்,

பரிமள வாசனை சேர்க்கையும், அழகு, ஆடை, ஆபரண
ரத்னம் இவைகளின் லாபமும், வசீகரமும் விவாகமு
சிருங்காரரஸமும், மதன விலாஸமும், டாம்பீகமு
வெள்ளி, ஈயம், புளி இவற்றின் லாபமும், வியாபார உ
னதமும் அதனால் லாபமும், பெண் சந்ததியும், நி
க்ஷேபலாபங்களும், ஸ்திரீதேவதா உபாஸனையு
வைதீக கர்மாக்களும் ஆகிய இப்பலன்கள் பூர்த்திய
நடக்கும். சுக்கிரன் பாவியாகவோ, பகை, பாவ
நீசக்ஷேத்திரங்களிலிருந்தோ, பகை, பாவர் கூட வே
பார்க்கவோ விருந்தால், இந்தத் திசையில் களத்
ஹானியும், விபசாரமும், துர்நடத்தையும், அவமானமு
வியாபார நஷ்டமும், வாகனத்தால் விபத்தும், நிந்த
யும், அவமானமும், பந்தனமும், ரோகமும், போகபோ
கியமின்மையும் நடக்கும்.

ஆகவே மேற்கூறிய தசாநாதர்கள் தங்க
தசாகாலங்களில் சுபாசுபத்தன்மைப்பிரகாரம் நன்
தீமை, சமரஸப்பலன்களைக் கொடுத்து வருகிறார்க
புக்திபலன்கள் பார்க்கும் வகையை முன்னரே கூறிய
ளோம். உதாரணமாக சுக்கிரன் திசைக்குச் சொன்
பலன்களை சுக்கிரன் புக்திக்கும் பொருத்தமாக எடுத்து
கொள்க. இவ்வாறு ஒவ்வொரு புக்தி பலன்களை
கவனிக்கவும்.

தசாபுக்தி பலன்கள் பார்க்கும்பொழுது கோசா
பலனையும் சேர்த்தே பலன் ஊஹிப்பது அனுபவ
பொருத்தமுள்ளதா யிருக்கிறது. பொதுவாக கோசா
பலனைப் பார்க்கும்போது வியாழன், சனி, இவர்க

...ட்டும் கவனிக்கிறார்கள். ஏனென்றால் வியாழன் ஒரு ...ராசியில் பிரவேசித்த காலமுதல் அதை விட்டுப்போகு ...ளவும் சராசரி ஒரு வருஷம் பிடிக்கும். இவ்வாறு ...னிக்கு இரண்டரை வருஷம் பிடிக்கும். இராகு, கேதுக் ...ளுக்கு ஒன்றரைவருஷம் பிடிக்கும். மற்ற கிரகங்களுக்கு ...ன்றரை மாதம் அல்லது ஒரு மாதம் பிடிக்கும். இவர் ...ர் நல்லஸ்தானங்களில்வந்தாலும், பாபிகள், பகைவர்கள் ...வர்களின் திருஷ்டி அல்லது சம்பந்தம் பெறுமலிருந் ...லும் தசாபுக்தி ரீதியாய் கிடைக்கக்கூடிய நன்மைப் ...லன்களைக் கிட்டும்படியாயும், தீமைப் பலன்களை ...வாரணம் செய்தும் தங்களாலியன்ற நன்மையைச் ...செய்வார்கள். பாவிகளின் திருஷ்டி அல்லது சம்பந்தம் ...றின் தசாபுக்தி ரீதியாய் கிடைக்கக்கூடிய நன்மைப் ...லன்களை அடையமுடியாதபடியாகவும், தீமைப் ...லன்களை நிவாரணம் செய்யாதபடி சக்தியற்றனவாக ...கிவிடுகிறார்கள்.

துர்ஸ்தானத்தில் வரும் கிரகங்கள் தங்கள் கோசார ...லத்தில், தசாபுக்திரீதியாய் கிடைக்கக்கூடிய நன்மைப் ...லன்களைக் கிட்டாதபடியாகவும், தீமைப் பலன்களை ...த்திசெய்தும் கொடுப்பார்கள். துர்ஸ்தானத்தில் சஞ் ...க்கும் கிரகங்களை சுபன் கூடில் அல்லது பார்க்கில் ...மை நிவாரணமோ, நன்மைப்பெருக்கோ நடக்கு ...ன்றறிவது.

கோசார துற்பலஸ்தானம்:— சூரியனுக்கு சந்திர ...ருக்குமிடமிருந்து 1, 2, 4, 5, 7, 8, 12 இந்த இடங் ...ளும் பகை, நீசவீடுகளும்.

சந்திரனுக்கு:— 2, 4, 6, 8, 10, 12 இந்த இட... களும் பகை நீச வீடுகளும்.

செவ்வாய்க்கு:— 1, 2, 4, 5, 7, 8, 10, 12 இந்... இடங்களும் பகை, நீசவீடுகளும்.

புதனுக்கு:— 1, 3, 7, 9, 10, 12 இந்த வீடுகளு... பகை, நீசவீடுகளும்.

வியாழனுக்கு:— 3, 4, 6, 8, 10, 12 இந்த வீடுகளு... பகை, நீசவீடுகளும்.

சுக்கிரனுக்கு:— 3, 5, 6, 7, 10 இந்த வீடுகளு... பகை, நீசவீடுகளும்.

சனிக்கு:— 1, 2, 4, 5, 7, 8, 10, 12 இந்த வீடுகளு... பகை, நீசவீடுகளும்.

இராகு, கேதுக்களுக்கு:— 1, 2, 4, 5, 7, 8, 10, 1... இந்த வீடுகளும், பகை நீசவீடுகளுமாகிய இவைகளாம்... நட்பு, ஆட்சி, உச்சவீடுகளும், மேற்கூறியவை நீங்கலா... மற்ற வீடுகளும் கோசார நற்பல ஸ்தானங்களென்று... கூறப்படும்.

மேலும் இந்தக் கிரகங்கள் பலன் கொடுக்கு... காலத்தை விவரிப்போம்.

சூரியன், செவ்வாய் இவர்கள் தங்கள் காலத்தி... முதன் முதலிலே பலனைக் கொடுத்துவிடுவார்கள். ச... திரன், சனி, இராகு, கேதுக்கள் கடைசிகாலத்தில் தங்க...